**O.S.No.69/2018**

வா.சா.2, திரு. ராமர்
நாள் : 13.03.2025 நேரம் : 12.21 P.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார் என்றால் வாதி அய்யாக்கண்ணு என்றால் சரிதான். வாதி அய்யாக்கண்ணு எனக்கு என்ன உறவு என்றால் மச்சான் ஆவார். எந்த சொத்திற்கு வழக்கு நடக்கிறது என்றும், அதன் விஸ்தீரணம், பட்டா எண் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, பக்கத்தில் எனது சொத்து உள்ளது. ஆதியில் தாவா சொத்து இருளத்தேவருக்கு பாத்தியம் என்றும், அதன் பிறகு அவரது மகன் ராமுத்தேவருக்கு பாத்தியம் என்றும், அதன் பிறகு வாதிக்கு பாத்தியம் என்றும், வாதி அனுபவம் செய்து வருவதாகவும், நான் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதை எந்த ஆவணங்களை பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் எனது பக்கத்து இடம் என்பதால் விவரம் அறிந்து கூறினேன், ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை.

2)நான் சொல்லுவதுபோல் தாவா சொத்து இருளத்தேவருக்கோ, ராமுத்தேவருக்கோ, வாதிக்கோ எக்காலத்திலும் பாத்திய அனுபவம் இல்லை என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கு பக்கத்தில் எனது சொத்து உள்ளது. வடக்கு பக்கத்தில் ரெ.வேலுத்தேவர் என உள்ளதா என்றால் உள்ளது, ரெ.வேலுத்தேவர் எனது தந்தை ஆவார். எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் எனது தந்தையார் பெயரை சித்திரவேலுத்தேவர் என நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் சித்திரவேலுத்தேவர் என்பது தான் சரி என்றாலும், நான் வழக்கிற்காக

ரெ.வேலுத்தேவர் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல, ரெ.வேலுத்தேவரும், சித்திரைவேலுத்தேவரும் ஒரே நபர் ஆவார்கள். நான் கூறுவது போல் தாவா சொத்திற்கு வடக்கு திசையில் எனக்கு எந்தவிதமான நிலமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்தானது வேறு எங்கோ உள்ள சொத்து என்றாலும், தாவா சொத்திற்கு அருகில் இல்லை என்றாலும் சரியல்ல.

3)தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்றால் அய்யாக்கண்ணு சொத்து உள்ளது. தெற்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்றால் அய்யாக்கண்ணு சொத்து உள்ளது. நான் வழக்கின் சொத்து விவரம் சரிவர தெரியாமல் வாதியின் மைத்துனர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தற்போது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.38 P.M

சாட்சியின் கையொப்பம்.